[1980 பிப்ரவரி 13

(திரு. க. சுப்பு)

இன்றைக்கு வந்திருக்கக்கூடிய அரசும் அதைத் தீவிரமாக அமல் படுத்தப் போகிறது என்று வந்த அறிவிப்பையொட்டி அங்கேயிருக்கக்கூடிய தமிழர்கள், மற்றவர்கள் அதாவது கன்னடியர் அல்லாத மற்றவர்களுக்கு வேலையே கிடைக்காது என்ற ஒரு மோசமான நிலைமை அங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து கேரள மாநிலத்தினுடைய முதலமைச்சர் நாயனார் அவர்களேகூட ரொம்ப வருத்தத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் அது கவனத்திற்கு வந்திருக்கும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் புரிந்து கொண்டேன். பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் எழுப்பிய நியாயமான உணர்வுகளின் அடிப்படையில் தமிழக முதல்வர் கர்நாடக மாநில முதல்வரோடு தொடர்பு கொண்டு அது குறித்து பேசிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

ஏ. கல்லூரிகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் அழகர்சாமி, கூத்தகுடி சண்முகம், சிவசாமி, உத்ராபதி, காளியப்பன், கோவிந்தராசன், கு. ரமணி ஆகியோர் கொடுத்துள்ள தீர்மானம்.

திரு. கூத்தகுடி க. சண்முகம் : தலைவரவர்களே பள்ளத்தூர் சீதாலட்சுமி கல்லூரி சம்பந்தமாகவும், அதைத் தொடர்ந்து செயின்ட் ஜோசப் கல்லூரி, நாமக்கல் கல்லூரி சம்பந்தமாகவும் நான் ஏற்கெனவே கொடுத்த அறிவிப்புகள் கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றி வந்திருக்கிறது. முதலிலே சீதாலட்சுமி கல்லூரி, பள்ளத்தூர், அதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய நிகழ்ச்சிகளைப்பற்றி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. சேவியர் பிச்சையா என்ற ஆசிரியர், திருச்சி புனித ஜோசப் கல்லூரியிலிருந்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவரை மீண்டும் பணியிலமர்த்தக் கோரி ஆசிரியர் சங்கம் போராட்டம் நடத்தி வருகிறது. மேற்படி சங்கத்தைச்

1980 பிப்ரவரி 13] [திரு. செ. அரங்கநாயகம்]

சேர்ந்தவர்கள் கல்லூரிகள் முன் உண்ணாவிரதம் இருந்து வரு கின்றனர். அதற்கு ஆதரவாக திருச்சியை சேர்ந்த ஜமால் மொகமது கல்லூரி, ஈ. வெ. ரா. கல்லூரி, உருமு தனலட்சுமி கல்லூரி ஆகிய கல்லூரிகளின் மாணவர்கள் ஆர்பாட்டம் செய்த தாக திருச்சி ஆட்சியாளரிடமிருந்து தகவல் கிடைக்கப்பெற் றுள்ளது. செயின்ட் ஜோசப் கல்லூரி 1—2—1980 முதல் மூடப்பட்டுள்ளது என்று தெரிகிறது. கல்லூரி முதல்வர் 10—2—1980 அன்று பெற்றோர் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளார். இக் கூட்டத்தில் கல்லூரி மீண்டும் திறப்பது பற்றி முடிவு எடுக்கப்படும்.

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர், ஆசிரியர்களுடனும், நிர்வாகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து கல்லூரிக் கல்வி இயக்குநரை இப் பிரச்சினைக்குத் தீர்வு காணு மாறு கேட்டுக் கொள்ளும் தீர்மானத்திற்கு ஒப்புக்கொள்ளப் பட்டது. மேலும் 4—2—1980 முதல் கல்லூரி முன் கிளர்ச்சி செய்வதை கைவிட ஆசிரிய சங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.

திருச்சி மாவட்ட ஆட்சியாளரின் பரிந்துரையின்படி திரு. சேவியர் பிச்சையாவின் சார்பில் எ.யு.டி. யைச் சேர்ந்த ஆசிரியர் களும், கல்லூரி நிர்வாகத்ினரும் 6—2—1980 அன்று கல்லூரிக் கல்வி இயக்குநரோடு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். இப் பிரச்சினைக் குறித்து ஒரு தீர்வுகாண முயற்சி எடுக்கப்படும்.

சீதாலட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர்;—பள்ளத் தூரிலுள்ள சீதாலட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி 24—1—1980 முதல் மூடப்பட்டுள்ளது. காரணம், மாணவிகள் ஆசிரியைகளால் தூண்டிவிடப்பட்டு, முதல்வரிடமிருந்து மன்னிப்புக் கேட்டு முதல்வரை 'கேரோ' செய்ததாகவும், கூச்சல், குழப்பம் உருவாக்கியதாகவும் முதல்வர் அறிவித்துள் ளார். மாணவிகள் நல்லமுறையில் நடந்துகொள்வதாக முதல் வருக்கு உறுதியளிக்க முன்வரவில்லை. மாணவிகளின் ஆர்ப் பாட்டம் வன்முறையாக மாறியதால் கல்லூரி மூடப்பட்டுவிட்டது என முதல்வர் அறிவித்துள்ளார். மாணவிகள் விடுதியையும் காலி செய்துவிட்டு ஊருக்குச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்கள். மாணவிகள் முதல்வரை மிகவும் தொல் லைக்கு உள்ளாக்கியதாகவும் அதனால் இரவு 12 மணி அளவில் முதல்வர் ஆசிரியரல்லாத ஊழியர்களால் ஒரு நண்பரின் வீட்டுக்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டார் என்றும முதல்வர் தெரிவித்துள்ளார். மாணவிகளை விடுதியை விட்டு வெளியேறி ஊருக்குச் சென்றுவிடுமாறு அறிவித்தும், அவர்கள் அவ்வாறு செல்லாது, 24—1—1980 அன்று காலை வன்முறையில் ஈடு பட்டனர் என கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார். காவல் துறைக்கும், வருவாய்த் துறைக்கும் இதுபற்றி தகவல்

அறிவிக்கப்பட்டு, வருவாய் துறை அதிகாரிகளும், சர்க்கிள் இன்ஸ்பெக்டரும் கல்லூரிக்கு வந்து மாணவிகளிடம் பேசி தீர்வு காண முயற்சித்தனர். இம் முயற்சி பயனளிக்காததால், கல்லூரி மூடப்பட்டது. தேவகோட்டை துணை கலைக்டர், ஆசிரியர்களையும் மாணவர்களையும் கல்லூரி மூடியுள்ளதால் கல்லூரியை விட்டுச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். விடுதி மாணவிகள் ஊருக்குச் செல்ல பணம் இல்லை என்று சொன்னதால், கல்லூரிச் செயளர் மாணவிகளுக்குப் பணம் கொடுக்க ஏற்பாடு செய்தார். மாணவிகள் விடுதியை விட்டு வெளியேறிவிட்டனர்.

மதுரை மண்டலக் கல்லூரிக் கல்வித் துறை இயக்குநர் இப் பிரச்னையைப் பற்றி ஆராய்ந்து தீர்வு காண பள்ளத்தூருக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்.

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—பேரவையின் அனுமதியோடு நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்:—தலைவரவர்களே, பெண்களே, அந்த மாணவிகளே 'கேரோ' செய்கிற அளவிற்குப் போயிருக்கிறார்கள் என்ற ஒரு செய்தியை அமைச்சர் அவர்கள் மூலம் அறிகிறேன். அங்கே கல்லூரி முதல்வர் ரொம்பத் தவறான முறையிலே, எல்லோரையும் கொடுமைப்படுத்தும் முறையிலே நடந்து கொண்ட காரணத்தினாலே, மாணவிகளுக்கு ஒரு ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது என்பதும், அந்த ஆசிரியைகள் பூராவுக்குமே மாணவிகள் பக்கம் நியாயம் இருக்கிறது என்ற உணர்வு வந்திருக்கும்போது, பெருவாரியாக, எல்லாக் கட்சிகளுமே அந்தக் கல்லூரி முதல்வருடைய நடவடிக்கைக்கு எதிர்ப்பாக உண்ணாவிரத நடவடிக்கை நடத்திக் கொண்டிருக்கின்றன. எனவே, இதிலே அரசு தலையிட்டு, வேலை நிறுத்தத்தை நீக்கி, அங்கே அமைதியை ஏற்படுத்தி, கல்லூரியைத் திறக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:—தலைவரவர்களே, அரசு நிச்சயமாக, இதிலே கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கும்.

திரு. சி. கோவிந்தராசன்:—இப்படி நியாயம் அற்ற முறையில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, அடிக்கடி தனியார் கல்லூரிகளில் அரசாங்கத்தினுடைய சம்மதம் இல்லாமல் நடந்து கொண்டிருக்கிற நிலைமை இருப்பதால், தனியார் கல்லூரிகள் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, ஆட்களை வெளியே தள்ளுவதற்கு

முன்பாக, குறைந்தபட்சம், அரசையாவது கலந்து செய்யக் கூடிய அளவுக்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட பாதுகாப்புகள் நாம் தந்திருந்தாலும் கூட, செயின்ட் ஜோசப் கல்லூரி, சிறுபான்மை இனத்தவரால் நடத்தப்படுகிற காரணத்தால் அரசினுடைய அதிகாரங்கள் பெரும் அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதுதான் இந்தப் பிரச்னையில் நாம் உடனடியாகத் தீர்வு காண முடியாமைக்குக் காரணம்.

(ஐ) தஞ்சாவூர் மாவட்ட வடிகால், வாய்க்கால் சீரமைப்புக் கோட்டங்கள் குறித்து.

திரு. மா. மணிமாறன்: தஞ்சாவூர் மாவட்டம் திருவாரூர் வடிகால் கோட்டம், தஞ்சாவூர் வாய்க்கால் சீரமைப்புக் கோட்டங்கள் முழுவதிலும் ஏற்பட்டுள்ள சிரமங்கள் குறித்து மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:— தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது அரசு பரிசீலனை செய்யும்.

திரு. மா. மணிமாறன்:—பேரவைத் தலைவரவர்களே, அதை நான் விளக்கிச் சொல்ல வேண்டாம். தீவிர விவசாயத் திட்டத்தில், தஞ்சை மாவட்டத்திலே குறிப்பிட்ட ஸ்பெஷல் டிவிஷன் எடுக்கப்பட்டாகி விட்டது, இப்பொழுது இரண்டு டிவிஷன்களும் க்ளோஸ் பண்ணக்கூடிய நிலைமையில் இருக்கிறது. ஆனால் அமைச்சரவர்கள் அதைக் கொடுக்கமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். பரிசீலனை செய்து, தஞ்சை மாவட்டத்து மக்களுக்கு உதவியாக இருப்பதற்கு, அங்கே செலவழிப்பதற்காக, வேண்டிய அலுவலர்களை மாற்றாமல் வைத்திருப்பதற்கான உறுதியினை மாண்புமிகு அமைச்சரவர்கள் வழங்கினால் தஞ்சை மாவட்ட மக்கள் நன்றிக் கடன் உடையவர்களாக இருப்பார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:— மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாம் கொண்டுள்ள அச்சத்தைப் போக்கிவிட்டு மிச்சத்தை கையிலே வைத்துக் கொள்ளலாம். ஆகவே கண்டிப்பாக அரசு உதவி செய்யும்.